[1993 ஏப்ரல் 12

திரு. ஆ. சுப்புரத்தினம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை ஆதிதிராவிட மக்கள் இந்த தனி வட்டாட்சியரிடம் அரசு திட்டங்களைப் பெறுவதற்காக பழனியிலிருந்து திண்டுக்கல் செல்ல 70 கிலோ மீட்டர் தூரம் பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. பாமர மக்களுக்கு அறியாமை என்ற பிரச்சினையோடு பணப் பிரச்சினையும் இருக்கக்கூடிய காரணத்தால், இன்றைக்கு ஆதிதிராவிடர் பெருமக்களுடைய நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டியும், ஆதிதிராவிடர்களுக்காக தனி தொழிற்பேட்டை அமைத்தும், ஆதிதிராவிடர்கள் நெஞ்சுயர்ந்து, தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய வகையிலே செய்து, நாளைய மறுதினம் பாபா சாகிப் அம்பேத்கார் மணிமண்டபத்திற்கு அடிக்கல் நாட்டக்கூடிய நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே இந்த தனி வட்டாட்சியர் அலுவலகத்தை பழனியின்—அதுவும் குறிப்பாக பழனி ஒரு தனித் தொகுதியாக இருக்கக்கூடிய காரணத்தால்—திண்டுக்கல்லிலிருந்து பழனிக்கு இடம் மாற்றம் செய்யப்படுமா என ஆவலோடு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினரும் இங்கே தான் இருக்கிறார். ஆகையால் அதை மாற்றுவதால் சில பிரச்சினைகள் ஏற்படும். ஆகையால் ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு தனி ஆய்வாளர் இருக்கிறார். வருவாய்த்துறை ஆய்வாளர் மூலமாக அந்த கோரிக்கைகள், குறைகள் போன்றவற்றை அந்தப் பகுதியிலே சுற்றுப்பயணம் செய்து சேகரித்து தனி வட்டாட்சியருக்குக் கொண்டு வருகிறார்கள். ஆகையால் இந்த அலுவலகம் மாற்றப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 320, திரு. ஆர். தங்கராஜ். மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

320—

வாரியங்காவலில் பிற்பட்டோர் நல மாணவர் விடுதி அமைத்தல்.

*10599— திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் உள்ள வாரியங்காவல் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு பிற்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு மாணவர் விடுதி எப்போது அமைக்கப்படும்?

1993 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியங்காவல் அரசு மேல்நிலைப் பள்ளியில் 980 மாணவர்களும், 470 மாணவிகளும் படிக்கின்றனர். அந்தப் பள்ளி இருக்கின்ற பகுதி மிகவும் பிற்போக்கான பகுதி. அப்படி இருக்கின்ற அந்தப் பள்ளியிலே மிகவும் வறுமைக்கோட்டின் கீழே இருக்கின்ற மாணவ மாணவிகள் தான் படிக்கின்றனர். அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலிலே அமைப்பதற்குண்டான சாத்தியக் கூறுகள் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். மீண்டும் அதை மறு பரிசீலனை செய்து அங்கு இருக்கின்ற மாணவ மாணவிகளுடைய நலனைக் கருதி, மாணவியர்களுக்காவது அல்லது மாணவர்களுக்காவது பிற்பட்டோர் நல வாரியத்தின் மூலமாக ஒரு விடுதி அமைத்துத்தர ஆவன செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் தொகுதியில் இருக்கின்ற வாரியங்காவல் கிராமத்தைச் சுற்றி 8 கிலோ மீட்டர் தொலைவுக்குள் 10 விடுதிகள் இயங்கி வருகின்றன. ஆண்டிமடம் தொகுதியில் மட்டும் கிட்டத்தட்ட 5 மிகப் பிற்படுத்தப்பட்ட நல விடுதிகள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் புதிய விடுதிகள் திறப்பதற்கு உத்திரவிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் புதிய விடுதிகள் அங்கே திறக்கப்பட வேண்டும் என்றால் அங்கு இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவ மாணவிகளுடைய எண்ணிக்கை, ஏற்கனவே உள்ள விடுதிகள், புதிதாக தொடங்க இடம் ஆகியவைகளை கருத்தில் கொண்டு அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப் படும் என்று சொன்னதற்கு அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.